(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 157.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூன் 23, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1184/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்ச்சோலை வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கி வந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அந்தப் பாடசாலை மாணவர்கள் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கு இறுதியாக தோற்றிய ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி பாடசாலையின் பெயர் யாதென்பதையும்;

(v) அந்தப் பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(vi) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(viii) அந்தப் பாடசாலையின் பெயருக்காக அந்தப் பாடசாலையின் தாபகர் அல்லது பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக திகழ்ந்தவரின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1363/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஏதேனும் பாடசாலையொன்றில் எட்டு வருடத்திற்கும் அதிகமான காலம் சேவையாற்றி வருகின்ற அதிபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதிபர் ஒருவர் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக எட்டு வருடத்தை விட அதிகமான காலம் சேவையாற்றுவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு மிகை ஊழியர் அடிப்படையில் அதிபர்களாக உள்ளீர்க்கப் பட்டவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளபோதும், அவர்களுடைய சேவைக்கான நிர்வாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததை அறிவாரா என்பதையும்;

(iv) அதற்கான தடைகள் யாவையென்பதையும்;

(v) பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு, மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்கள் விண்ணப்பிப்பதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

(vi) எட்டு வருடத்திற்கும் அதிகமாக ஒரே பாடசாலையில் மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்களுக்கு, இடமாற்றம் வழங்குவதற்குள்ள இயலுமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1408/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வன்னித் தேர்தல் மாவட்டத்திற்குரிய வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களில் தமது சொந்தக் காணிகளில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களில், அரசாங்கத்திடம் இருந்து சட்டரீதியான காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டுள்ள மற்றும் காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(v) கடந்த அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'உருமய' வேலைத்திட்டம் மீளவும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1470/2025

கௌரவ சானக மாதுகொட,— இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சந்தையில் விளையாட்டு உபகரணங்களின் விலை துரிதமாக அதிகரித்து வருவதால் கிராமிய விளையாட்டு வீரர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) விளையாட்டு உபகரணங்களின் விலை கிராமிய பிரதேசங்களில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதில் தாக்கம் செலுத்தும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை சலுகை விலையில் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அவற்றை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1473/2025

கௌரவ கே.காதர் மஸ்தான்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள மேற்கு தாராபுரம் கிராம அலுவலர் பிரிவில், பூர்த்தி செய்யப்படாத நிலையில் கைவிடப்பட்டிருக்கும் கூட்டுறவு கிராம கருத்திட்டத்திற்குரிய இரண்டு கட்டிடங்கள் உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு, மன்னார் பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்திற்கான சாத்தியவள அறிக்கை உட்பட அனைத்து அனுமதிப் பத்திரங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் சம்பந்தமாக ஏதேனும் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனின், அவ்வறிக்கையை சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிப்படுத்தல் உறுதியின் மூலம், வரையறுக்கப்பட்ட இலங்கை முயற்சியாண்மை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் சட்டவிரோதமான முறையில் உரித்தைப் பெற்றுக்கொண்ட காணியிலேயே இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மாத்திரம் நிறுவப்பட்டு, குறிப்பிட்ட அமைச்சில் பதிவு செய்யப்பட்டு, தற்போது செயற்படாத நிலையில் காணப்படுகின்ற இச்சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி, பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவிலக்கம் போன்றவற்றின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இச்சங்கத்தின் யாப்பின் பிரதியொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) சங்கத்தின் தலைவர் மற்றும் ஏனைய அங்கத்தவர்களின் பெயர்கள், தனிப்பட்ட முகவரிகள் உள்ளிட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) இச்சங்கத்தின் ஊடாக இற்றைவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1475/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அல்லது இனங்காணப்பட்டுள்ள வன ஒதுக்கங்களின் அளவு மற்றும் வன ஒதுக்கங்களாக பிரகடனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வனங்களின் அளவு ஹெக்டயர்களில் எவ்வளவு;

(ii) நீண்டகாலமாக வதிவிட தேவைகளுக்காக அல்லது பயிர்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், பிற்காலத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள காணிகளின் அளவு மேற்படி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி காணிகளில் மீள விடுவிப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாது;

(iv) திருகோணமலை மாவட்டத்தில் யானை-மனித மோதலைக் கட்டுப்படுத்துவதற்காகத் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1855/2026

கௌரவ சுனில் ரத்னசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களம் நிறுவப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) ஆரம்பத்திலும் தற்போதும் திணைக்களத்திற்குச் சொந்தமாகவுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஆரம்பத்திலும் தற்போதும் புகையிரத வீதிக் கட்டமைப்பின் மொத்த நீளம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) புகையிரதங்களின் எண்ணிக்கையும், புகையிரத வீதிக் கட்டமைப்பின் மொத்த நீளத்தையும் தற்போது வரை விரிவடைந்துள்ள அளவையும் கருத்திற் கொள்கையில், அந்த அதிகரிப்பு போதுமானதாக உள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், புகையிரதங்களின் எண்ணிக்கையையும் புகையிரத வீதிக் கட்டமைப்பின் நீளத்தையும் அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு 2026 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்கையில் இடம்பெறும் விபத்துகளைக் குறைப்பதற்கும், மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் நடைமுறையில் உள்ள ஒழுங்குறுத்துகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நகர்ப்புறப் பிரதேசங்களிலுள்ள முறையற்ற நிர்மாணிப்புக்களை முறைப்படுத்தும் வேலைத்திட்டமொன்று காணப்படுகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1907/2026

கௌரவ எம்.எஸ் உதுமாலெப்பை,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலஞ்சென்ற எம்.எச் மொஹமட் அவர்கள் அமைச்சு பதவி வகித்த காலத்திலிருந்து, தேசிய மீலாதுந் நபி விழா மாவட்ட மட்டத்தில் கொண்டாடும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) காலஞ்சென்ற ஏ.எச்.எம் அஸ்வர் அவர்கள் அமைச்சு பதவி வகித்த காலத்தில் தேசிய மீலாதுந் நபி விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது என்பதையும்;

(iii) அதற்கு பின்னரும் மாவட்ட மட்டத்தில் அந்த விழா கொண்டாடப்பட்டது என்பதையும்;

(iv) அதன் மூலம் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள் புனரமைக்கப்பட்டதோடு, முஸ்லிம் கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டில் தேசிய மீலாதுந் நபி விழாவை நடாத்துவதற்கு இன்றளவில் தீர்மானிக்கப்பட்டுள்ள மாவட்டமும் பிரதேசமும் யாது என்பதையும்;

(ii) அந்த விழாவை அலரி மாளிகையில் நடாத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1939/2026

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான மொத்தப் புகையிரத ஒதுக்குக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணிகள் பயன்படுத்தப்படுகின்ற விதம் மற்றும் அதற்காக பின்பற்றப்படுகின்ற வழிமுறை யாதென்பதையும்;

(iii) புகையிரதப் பாதைக்கு இருபுறமாக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்குக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒதுக்கக் காணிகளைப் பாதுகாத்தல், துப்புரவு செய்தல் மற்றும் பராமரிப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) ஒதுக்குக் காணிகளை ஊடறுத்துச் செல்வதும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் பராமரிக்கப்படுகின்றதுமான பாதைகளை அபிவிருத்தி செய்கின்ற போது, ஏற்படுகின்ற சிக்கல் நிலைமைகளை அறிவாரா என்பதையும்;

(vi) மேற்படி பாதைகளைப் புனரமைப்பதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை (இல. 1),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.எம். மரிக்கார் அவர்கள், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2025 நவம்பர் 13 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

2.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை (இல. 2),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்கள், தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2026 ஜூன் 10 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மாச்சு 31 ஆம் திகதிய 2482/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மே 04 ஆம் திகதிய 2487/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மே 07 ஆம் திகதிய 2487/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

5.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 1(2) ஆம் பிரிவின் கீழ் அப்போதைய வலுசக்தி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2026 மாச்சு 05 ஆம் திகதிய 2478/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47 ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2026 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2026.06.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*15.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

18\.
மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19\.
இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20\.
காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21\.
கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

2001/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 முதல் 2026 ஆம் ஆண்டுகளுக்கிடையில் செயற்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமான 'அதிகமாக உணவுகளை வளர்ப்போம்' அல்லது அதுபோன்ற கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவை நிர்வகிக்கப்பட்ட அமைச்சுக்கள் அல்லது நிறுவனக் கட்டமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட மொத்த பொதுச் செலவினத்தில், உர மானியங்கள், நீர்ப்பாசன விரிவாக்கம், விதை அபிவிருத்தி , விரிவாக்க சேவைகள், சந்தைப்படுத்தல் மற்றும் சேமிப்பு உட்கட்டமைப்புக்கான ஒதுக்கீடுகள் உட்பட ஆண்டுரீதியான செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகச் சுயாதீனமான செயலாற்றுகைக் கணக்காய்வுகள் அல்லது தாக்க மதிப்பீடுகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இந்தக் காலகட்டத்தில் விவசாயிகளின் இலாபமீட்டும்தன்மை, பயிர் செய்யப்பட்ட பரப்பு, ஒரு ஹெக்டேயருக்கான பயிர் விளைச்சல், உற்பத்திச் செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஆகியவற்றில் காணப்பட்ட போக்குகள் யாவை என்பதையும்;

(vi) உரக் கொள்கை மாற்றங்கள், நீர்ப்பாசனப் பற்றாக்குறைகள், போதுமான களஞ்சிய வசதியின்மை, விநியோகச் சங்கிலித் திறமையின்மைகள், சந்தைச் சிதைவுகள், விலை நிர்ணயத்தில் நிச்சயமற்ற தன்மை, அல்லது கட்டுப்படியான கடனைப் பெறுவதிலுள்ள வரையறுக்கப்பட்ட அணுகல் உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான தடைகள், நிலையான இறக்குமதி மாற்றீட்டையும் உள்நாட்டு விவசாய மீள்திறனையும் தடுத்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---